1969 மார்ச் 27]

*508—வினு : திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அம்புலி ஆற்றில் சித்தாதிக் காட்டுக்கு அருகில் நீர்ப் பாசனத்துக்கு அணை கட்டும் திட்ட வேலைக்கு ஆய்வு அறிக்கை எந்த ஆண்டு தயாரிக்கப் பெற்றது ?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

(உ) அதன் வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) 1967.

(இ) ரூபாய் 2.82 லட்சம்.

(உ) இத்திட்டம் ஆலோசனையில் உள்ளது. இத்திட்டம் ஏற்கப்பட்டால் அதன் பின்னர் இப்பணி தொடங்கப்படும்.

Employees of Annamalai University Hostel.

*509 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the employees of the hostel in Annamalai University staged an agitation in March and April 1968, by not receiving their salaries ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) இப்பல்கலைக் கழகத்தின் மற்ற ஊழியரைப் போலத் தங்களுடைய அகவிலைப் படியும் மாநில அரசாங்க அலுவலர்களுடைய அளவுக்கு உயர்த்தப்பட வேண்டுமென இத்தொழிலாளர் கேட்டனர். ஆனால், பல்கலைக் கழகங்கள் தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித் துறைகளுக்கு உட்படாததால், இதில் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அண்ணமலை பல்கலைக் கழக உணவு விடுதியில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் அகவிலைப்படி கூட்டித் தரப்பட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். மறைந்த முதல் அமைச்சர் அவர்களிடம் கூடக் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நிர்வாகத்தில் இருப்பவர்கள் அரசு அதிகமாக மானியம் கொடுத்தால் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். சென்ற ஆண்டு 2 லட்சம் அதிகமாகவே அரசு மானியம் கொடுத்திருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் சொல்கிற தகவல் என்னிடத்தில் இல்லை, அதை விசாரித்துப் பார்க்கிறேன்.

மாநில வீட்டு வாரியத்து வீடுகள்.

*510—வினு : திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் வீடுகளில் (Government Quarters) உள்ள அரசாங்க அலுவலர்கள் சொந்தமாக வீடு கட்டினுல் சர்க்கார் வீடுகளைக் காலி செய்துவிட வேண்டும் என்ற விதி உள்ளது போல் வீட்டு வசதி போர்டுக்குச் (State Housing Board) சொந்தமாக உள்ள வீடுகளிலும் அரசாங்க அலுவலர்கள் காலி செய்ய விதி உள்ளதா ?